**O.S.No.21/2018** **தேதி – 23.07.2025**

**பி.வா.சா.1. – சீனிவாசன்**

**பிரதிவாதி தரப்பு முதல்விசாரணை தொடர்ச்சி–**

நான் தாக்கல் செய்த இடைக்கால மனு எண்.4/2023ன் இந்த நீதிமன்றம் 16.02.2024ம் தேதி பிறப்பித்த உத்தரவின் நகல் இன்று தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ.11 ஆகும்.

**வாதி தரப்பு குறுக்குவிசாரணை –**

நான் பி.இ.எஸ் படித்துள்ளேன். இது மூன்று வருட பட்டப்படிப்பு ஆகும். நான் 30 வருடங்களாக ஜவுளி மற்றும் நூல் வியாபாரம் செய்து வருகிறேன். நூல் வியாபாரத்தை 2012ம் வருடத்திலிருந்து செய்து வருகிறேன். 2ம் பிரதிவாதி என்னுடைய உடன் பிறந்த சகோதரர், அவருக்கும் சேர்த்து நான் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு பங்குதாரர் நிறுவனம் மற்றும் தனி உரிமையாளர் நிறுவனம் பற்றி தெரியும். பங்குதாரர் நிறுவனத்தினுடைய நடவடிக்கைகளை பங்குதாரர் நிறுவன ஆவணப்படி ஏதாவது ஒரு பங்குதாரர் மேற்கொள்ளலாம் என்றால் ஆவணத்தில் குறிப்பிட்டிருந்தால் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளலாம். பங்குதாரர் நிறுவனத்தில் நடவடிக்கைகளை ஒரு பங்குதாரருக்கு அதிகாரம் இல்லாமல் மேற்கொண்டால் அது சம்பந்தமாக கேள்வி கேட்பதற்கு நிறுவனத்தின் மற்ற பங்குதாரருக்கு மட்டுமே உரிமை உண்டு என்று சொன்னால் சரிதான். நான் நடத்தி வருவது பங்குதாரர் நிறுவனம் ஆகும். எனது நிறுவனத்தின் பெயர் சொர்ண கணபதி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் ஆகும். எங்கள் நிறுவனத்தில் மொத்தம் 6 பங்குதாரர்கள் உள்ளோம். வாதி பங்குதாரர் நிறுவனத்தை எனக்கு எத்தனை வருடங்கள் தெரியும் என்றால் 2013லிருந்து தெரியும். வாதி நிறுவனத்தை எப்படி தெரியும் என்றால் ராஜசேகர் மூலமாக தெரியும். நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரைக்கு விபரங்கள் கூறியது நான்தான். அதில் உள்ள விபரங்களை நான் படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எதிர்வழக்குரையில் பக்கம் எண்.7 பாரா 14ல் பூர்த்தி செய்யப்படாத புரோநோட்டுக்கள், காசோலைகளை வாதி நிறுவன பங்குதாரரிடம் நாங்கள் ஒப்படைத்ததாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி

எதிர்வழக்குரையில் பக்கம் எண்.11, பாரா 19 ல் ராஜசேகரன் வசம் உள்ள மற்றும் வாதி நிறுவனம் வசம் உள்ள எங்கள் கையொப்பங்கள் மற்றும் கைரேகையிட்ட பூர்த்தி செய்யபப்படாத புரோநோட்டு மற்றும் காசோலைகளை பூர்த்தி செய்து வழக்கு தாக்கல் செய்ததாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி எதிர்வழக்குரையில் பக்கம் எண்.4, பாரா 6 ல் 11 வது வரியில் பிரதிவாதிகள் வாதியிடம் தாவா கடனுறுதி சீட்டுக்கு ஆதரவாக காசோலை கொடுக்கவில்லை என்றும், அந்த காசோலை புரோநோட்டில் சாட்சி கையொப்பமிட்ட ராஜசேகரனிடம் நாங்கள் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். காசோலையும், புரோநோட்டும் வாதி நிறுவனத்திடம் கொடுத்ததா அல்லது ராஜசேகரனிடம் கொடுத்ததா என்றால் வாதி நிறுவனத்திடம் கொடுத்ததுதான். மேற்படி எதிர்வழக்குரை பக்கம் 4, பாரா 6 ல் காசோலை சாட்சியாக கையொப்பமிட்டுள்ள ராஜசேகரனிடம் கொடுத்ததாக கூறுவது பொய்யில்லை. அது உண்மை. நான் நூல் சப்ளை செய்வதற்கு கொள்முதல் பெறக்கூடிய அட்வான்ஸ் தொகைக்கு காசோலையும், புரோநோட்டும் கொடுக்கும் வழக்கம் உண்டு என்றால் அட்வான்ஸ் தரக்கூடிய நபர் கேட்டால் கொடுப்போம். பொதுவாக நான் நூல் சப்ளை செய்வதற்கு ஆர்டர் பெற்றால் சரக்கு பெறும் நபரிடம் அட்வான்ஸ் தொகையை நேரடியாக ரொக்கமாக வாங்குவதில்லை. வங்கி பரிவர்த்தனை மூலம் பெறுவேன்.

**குறுக்குவிசாரணை வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**